சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

ஓ.எஸ்.எண்.121/2022

2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 08 ம் நாள் பி.வா.சா.3 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.தினேஷ்குமார், இளநிலை உதவியாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கலைச்செல்வி | வயது | 34 |
| க/பெ | வேலுச்சாமி | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | பெள்ளேபாளையம் | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | கிராம நிர்வாக அலுவலர் |

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி :

அய்யாக்குட்டியின் வாரிசு விபரங்களை விசாரிக்க சொல்லி எனக்கு வந்த நீதிமன்ற அழைப்பாணையில் இந்த வழக்கின் பிராது இணைக்கப்பட்டு இருந்தது என்றால் சரி தான். அந்த பிராது நகலை படித்துப் பார்த்தேன். பிராதில் கண்டுள்ள வாதிகள் மற்றும் பிரதிவாதிகளில் யாரை எல்லாம் விசாரித்தேன் என்றால் 1 ஆம் பிரதி வாதிக்கு வயது ஆகி விட்டதால் அவரது மகனை விசாரித்தேன். அவரது பெயர் நினைவு இல்லை. 1 ஆம் பிரதிவாதி குடும்பத்தில் அவரை மட்டும் விசாரித்தேன். அவரிடம் வாக்குமூலம் எதுவும் வாங்கினேனா என்றால் இல்லை. 1 ஆம் பிரதிவாதி சார்பாக இராமன் மகன் இரங்கன், கிட்டான் மகன் மாறன் ஆகியோர்களை விசாரித்து அவர்களிடமும் வாக்குமூலம் வாங்கினேன். அவர்கள் என்னிடம் என்ன கூறினார்கள் என்றால் அவர்கள் இருவரும் தங்களுடைய வாக்குமூலத்தில் அய்யாக்குட்டிக்கு இரண்டு மனைவிகள் உள்ளதாக கூறினார்கள். அந்த இரண்டு மனைவிகளின் பெயர் என்ன என்று கூறினார்கள் என்றால் சின்னம்மாள் மற்றும் இராமாள் என்று கூறினார்கள். தாவா சொத்தை பொறுத்த வருவாய் ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். 10(1) அடங்கல் சா.சா.ஆ.1. தாவா சொத்து யார் பெயரில் உள்ளது என்றால் 1379 பசலி வருடத்தில் புல எண். 225 இராமன் வகையரா என்று உள்ளது. 1385 பசலி வருடத்தில் புல எண். 225/1 அ. குட்டி மாறன் என்று உள்ளது. அடங்கலில் சின்னம்மாள் மற்றும் இராமாள் பெயர் உள்ளது என்றால் 1425 ஆம் பசலிக்கு சின்னம்மாள் பெயர்

நீக்கப்பட்டு சின்னம்மாளின் பெயரும் இராமாத்தாள் பெயர் நீக்கப்பட்டு டீ. பார்க் இந்தியா லிமிட்டடு என்ற பெயரிலும் 1429 பசலிக்கு சின்னம்மாள் பெயரும் உள்ளது. "அ " பதிவேடு சா.சா.ஆ.2 சிட்டா சா.சாஆ.3 சிட்டாவில் சின்னம்மாள் பெயர் உள்ளது. நீதிமன்ற அழைப்பாணையில் 1950 ஆம் ஆண்டில் இருந்து வருவாய் ஆவணங்களை கொண்டுவர சொல்லி இருந்தது என்றால் சரி தான். ஆனால் நான் 1969 ஆம் ஆண்டில் இருந்து தான் கொண்டு வந்து உள்ளேன் என்றால் அந்த ஆவணங்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ளது. அந்த ஆவணங்கள் வட்டாச்சியர் அலுவலகத்திலேயே உள்ளது என்றால் சரி அல்ல. வேண்டும் என்றே அந்த ஆவணங்களை கொண்டு வர வில்லை என்றால் சரி அல்ல. நான் சாட்சிகளை இன்னும் சரியாக விசாரித்து இருந்தால் வாரிசு விபரங்களை சரியாக தெரிந்து இருப்பேன் என்றால் சரி அல்ல.

**<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

வட்டாச்சியருக்கு வந்த அழைப்பாணையில் என்ன சொல்லப்பட்டு உள்ளது என்றால் மேட்டுப்பாளையம் வட்டம் பள்ளேபாளையம் கிராமம், கா.ச. எண்.225/1ன் பட்டா, சிட்டா, அடங்கல் 1950 வருடத்தில் இருந்து நகல் கொண்டு வரச் சொல்லி இருந்தது. எனக்கு வந்த அழைப்பாணையில் என்ன சொல்லப்பட்டு உள்ளது என்றால் மேட்டுப்பாளையம் வட்டம் பள்ளேபாளையம் கிராமத்தை நிரந்தர முகவரியாக கொண்ட அய்யாக்குட்டி என்பவரின் வாரிசு விபரங்களை விசாரிக்க சொல்லி இருந்தது. அழைப்பாணையுடன் சாட்சி விசாரிக்க அனுமதி கோரும் நகலும் இணைக்கப்பட்டு இருந்தது என்றால் சரி தான். எனக்கு வந்த அழைப்பாணையிலோ, வட்டாச்சியருக்கு வந்த அழைப்பாணையிலோ அய்யாக்குட்டிக்கு எத்தனை மனைவிகள் என விசாரிக்க சொல்லி உள்ளதா என்றால் இல்லை. இந்த வழக்கு யார் யார் மீது எதற்காக தாக்கல் செய்து உள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. யார் சொல்லி

அய்யாக்குட்டிக்கு எத்தனை வாரிசுகள் என விசாரித்தேன் என்றால் ஊரில் விசாரிக்கும் போது விசாரித்தவர்கள் சொன்னார்கள். அய்யாக்குட்டிக்கு 2 மனைவிகள் என்று சொன்னவர்களின் பெயர் என்ன என்றால் துரைச்சாமி, கருப்பசாமியின் மனைவி ருக்குமணி, பழனி மனைவி நஞ்சம்மாள் மற்றும் மற்றொரு கருப்பசாமி, சிவாக்காள் ஆகியோர்கள் சொன்னார்கள். நான் 9 ஆண்டுகளாக கிராம நிர்வாக அதிகாரியாக பணி புரிந்து வருகிறேன். வட்டாச்சியரிடம் வாரிசு சான்று கோரி தாக்கல் செய்யப்படும் மனுக்கள் விசாரணைக்காக கிராம நிர்வாக அதிகாரியிடம் தான் வரும் என்றால் சரி தான். அவ்வாறு விசாரணை செய்து வாக்கு மூலங்களைப் பெற்று வட்டாச்சியரிடம் ஒப்படைப்போம் என்றால் சரி தான். நான் விசாரித்த நபர்களிடம் வாக்குமூலம் பெற்றதாக எந்த ஆவணமும் இல்லை என்றால் சரி தான். அவர்களின் ஆதார் அட்டையை வாங்கவில்லை என்றால் அவர்கள் தர வில்லை. அய்யாக்குட்டி எந்த ஆண்டு இறந்தார் என்று விசாரித்தேன் என்றால் சுமார் 110 ஆண்டுகளுக்கு முன்னர் இறந்ததாக தெரிந்து கொண்டேன். அவர் எங்கு இறந்தார் என விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். ஆனால் யாருக்கும் தெரியாது. அய்யாக்குட்டி எங்கு வசித்து வந்தாரோ, எங்கு இறந்தாரோ என்று விசாரித்தால் தான் தெரியும்.

(வாதிதரப்பாளரின் வேண்டுகோளின் படி வாதி தரப்பின் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

Sd/- G. Gengaraj,
சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.